# இளைஞர் அணி சமூக வலைதள மாவட்டத் துணை அமைப்பாளர் பொறுப்புக்கு, சென்னை கிழக்கு, சென்னை வட கிழக்கு, சென்னை தென் மேற்கு ஆகிய மாவட்டங்களுக்கான நேர்காணல்!

## தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மேற்கொண்டார்!









இயக்கத்தின் முதன்மை அணியாம் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட வுள்ளனர். கழக மாவட்ட வாரியாக அவர்களை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் செய்து வருகிறார். அந்த வகையில், நேற்று முன்தினம் (29.6.2025) சென்னை கிழக்கு, சென்னை வட கிழக்கு, சென்னை தென் மேற்கு மாவட்ட சமூக வலை தளத் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்த வர்களை, மாநில துணைச் செயலாளர் எஸ்.ஜோயல் முன்னிலையில் நேர்காணல் செய்தார். அவர்களின் சமூக வலைதளப் பக்கங்களைப் பார்வையிட்டுஅவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன், அவர்கள் கொண்டு வந்திருந்த ஆவணத் தொகுப்பு களையும் ஆய்வு செய்து, கழக பணி சிறக்க வாழ்த்தினார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.6.2025) சென்னை மெட்ரோ இரயில் நிறுவன கூட்டரங்கில் நடைபெற்ற 19 வது தேசிய புள்ளிஇயல் தின விழாவில், தரவுகளின் அடிப்படையில் சிறப்பு ஆய்வறிக்கை தயார் செய்யும் போட்டியில் மாநில மற்றும் மாவட்ட அளவில் வெற்றி பெற்ற அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் மாநிலத் திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர். ஜெ. ஜெயரஞ்சன், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, பொருள்இயல் மற்றும் புள்ளியியல் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் திருமதி ஆர். ஜெயா, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (30.6.2025) சென்னை மெட்ரோ இரயில் நிறுவன கூட்டரங்கில் நடைபெற்ற 19 வது தேசிய புள்ளிஇயல் தின விழாவில் புள்ளிஇயல் சார்ந்த பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிப்பதற்காக பொருள் இயல் மற்றும் புள்ளிஇயல் துறை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் மாநிலத் திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர். ஜெ. ஜெயரஞ்சன், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, பொருள்இயல் மற்றும் புள்ளியியல் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் திருமதி ஆர். ஜெயா, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### வேலூர் மாவட்டம்

## காட்பாடி வடக்கு பகுதி செயலாளர் ஜி.வன்னியராஜா இல்ல திருமணம்!

### கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

வேலூர், ஜூலை,1-

வேலூர் மாவட்டம் காட்பாடி வடக்கு பகுதி திமுக செயலாளர் ஜி.வன் னியராஜாமாநகராட்சி மண்டல குழு தலைவர் புஷ்பலதா ஆகியோரின் இல்லதிருமணம் 2ந்தேதி (புதன்கிழமை) காட்பாடி யில் நடக்கிறது. இதில் கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு திரும ணத்தை நடத்தி வைத்து சிறப்புரை ஆற்றுகி றார்கள்.



காட்பாடி வடக்கு பகுதி திமுக செயலாளர் வன்னியராஜா மணடல குழு தலைவர் புஷ்பலதா ஆகியோரின் மகள் வி.விஷ்ணு பிரியா இராணிப்பேட்டை மாவட்டம் நவல்பூர் பூபதி ஜோதி ஆகியோரின் மகன் சுரேஷ் குமார் இவர்களின் திருமணம் நாளை (2ந்தேதி - புதன்கிழமை) காலை 9மணிக்குள் நடக்கிறது.

நிகழ்ச்சியில் கழக பொதுச் செயலாளர் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ் நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.எஸ். சிவசங்கரன், இராணிப்பேட்டை ஆர். காந்தி, இரா.ராஜேந்திரன், வி.ஐ.டி.வேந்தர்ஜி. விசுவநாதன், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத் ரட்சகன், வேலூர் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம் எல்ஏ, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.எம். கதிர்ஆனந்த், டி.எம்.செல்வகணபதி, சி.என். அண்ணாதுரை, மாவட்ட கழக செயலாளர்கள் க. தேவராஜி எம்எல்ஏ, எஸ். ஆர். சிவலிங்கம், மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்தி கேயன் எம் எல்ஏ, மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், கலந்து கொண்டு வாழ்த்துகிறார்கள்.

### நெல்லை கிழக்கு மாவட்டம் நாங்குநேரியில்

## பா.ஜ.க.வினர் மகேஷ்வில்சன் தலைமையில் கழகத்தில் இணைந்தனர்!

### மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில்!

நெல்லை.ஜூலை.1-

நெல்லை கிழக்கு மாவட்டம் நாங்குநேரி மேற்கு ஒன்றிய கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் முன்னிலையில் நெல்லை தெற்கு மாவட்ட பா.ஜ.க. ஐடி விங் மாவட்ட துணை தலைவர் மகேஷ் வில்சன் தலைமையில் 50 பேர் அக் கட்சியிலிருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

திராவிட மாடல் முதலமைச்சர். கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் தலைமையை ஏற்றும், "ஓரணியில் தமிழ்நாடு" என்ற கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் குறிக்கோளை கருத்தில் கொண்டும் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் தமிழ் நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர்,முதலமைச்சர் அவர்களை மனதார ஏற்றுக் கொண்டும், கழக இளைஞர் அணி செயலாளர்-துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் திறமையை புரிந்து கொண்டும் நெல்லை கிழக்கு மாவட்டம் நாங்குநேரி மேற்கு ஒன்றிய கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் நெல்லை தெற்கு மாவட்ட பா.ஜ.க. ஐடி விங் துணை தலைவர் மகேஷ் வில்சன் தலைமையில் அக்கட்சியிலிருந்து 50 பேர் விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். கழகத்தில் இணைந்த அவர்கள் அனைவரையும் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் வரவேற்று கழக இருவண்ண சால்வை அணிவித்தார்.

நிகழ்வில் மாநில தொண்டர் அணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம்,நாங்குநேரி மேற்கு ஒன்றிய செயலாளர் ஆர். எஸ்.சுடலைக் கண்ணு, மறுகால்குறிச்சி ஊராட்சி மன்ற துணை தலைவர் புஷ்ப பாண்டி,மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சங்கர், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் குமார், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் உதயகுமார், ராபின், சுபாஷ், ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வர்கிஸ்,ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் முத்து,ஒன்றிய பிரதிநிதி பரமசிவம் உள்பட கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.